# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்.183/பேரூ/2022**
**நாள்: 24.11.2022**

திரு. R.அறிவுமணி,
செட்டியார்பட்டி. ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
செட்டியார்பட்டி பேரூராட்சி. ... எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், நெ.214/SSK/23, நாயுடு தெற்கு தெரு, செட்டியார்பட்டி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. R.அறிவுமணி, என்பவரது **10.10.2022** நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் **11.10.2022** அன்று பெறப்பட்டு **183/2022** என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், நெ.214/SSK/23, நாயுடு தெற்கு தெரு, செட்டியார்பட்டி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. R.அறிவுமணி, தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

"விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், செட்டியார்பட்டி பேரூராட்சி தலைவர் திரு. R. ஜெயமுருகன் மற்றும் செயல் அலுவலர் திருமதி சந்திரகலா என்பவரும் சேர்ந்து பல்வேறு நிர்வாக சீர்கேடுகள் முறைகேடுகள், விதிமீறல்கள் செய்து செட்டியார்பட்டி பேரூராட்சி நிதியை வீணாக்குவதுடன் பொதுமக்களிடம் நிர்வாகத்தின் மீதும் தமிழக அரசின் மீதும் அவப்பெயர் ஏற்பட காரணமாய் உள்ளனர். எனவே, மேற்காணும் நபர்கள் மீது முறையான நடவடிக்கை எடுத்து அவர்களை பணிநீக்கம் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் அவர்கள் இருவரும் சேர்ந்து செய்த முறைகேடுகள் நிதி இழப்புகளை கீழ்க்காணும் விவரப்படி என்று தெரிவித்துள்ளார்.

**திட்ட பணிகள்**

1) செட்டியார்பட்டி பேரூராட்சியில் நடைபெறும் திட்ட பணிகள் மற்றும் பொதுநிதி பணிகளுக்கு தகவல்களை பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிக்காமலும் டெண்டர் நோட்டீஸ் வார்டு உறுப்பினர்களுக்கோ, பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களுக்கு தெரிவிக்காமல் தலைவர் மற்றும் செயல் அலுவலர் கூட்டாக சதி

செய்து தனக்கு பெருந்தொகையை லஞ்சமாகத் தரும் ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஒதுக்கீடு ஆணை வழங்கி வருகின்றனர். இது தொடர்பாக மன்ற உறுப்பினர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு முறையான பதில் கூறாமல் தன்னிச்சையாக செயல்பட்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

2) 15 வார்டுகளிலும் பைப்லைன் சரிபார்த்தல், வடிகால் ரிப்பேர் போன்ற பில்களை வார்டு உறுப்பினர்களுக்கு தெரிவிக்காமலும் அவர்களின் ஒப்பம் பெறாமலும் போலியாக பட்டியல் தயார் செய்து தொகையினை மாதந்தோறும் பெருமளவில் கொள்ளையடித்து வருகின்றனர். இது தொடர்பாக மன்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பும்போது எந்தவித முகாந்திரமும் கூறப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

3) பேரூராட்சி பகுதிகளில் பொதுமக்கள் நலன் கருதி பொது சுகாதார தளவாட சாமான்கள் பொது சுகாதார பயன்பாட்டிற்கு பெறப்படும் பிளிச்சிங் பவுடர் பினாயில் போன்றவற்றிற்கும் தெருவிளக்கு பராமரிப்பு சாமான்கள் கொள்முதல் செய்வதிலும் பெருமளவு முறைகேடுகள் செய்து லட்சக்கணக்கில் போலி பில்கள் தயார் செய்து மாதந்தோறும் பேரூராட்சியில் நிதி இழப்பு செய்து வருகின்றனர். மேலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 69ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தலைவரோ செயல் அலுவலரோ சட்டத்தை மதிப்பதே இல்லை என்று தெரிவித்துள்ளார்.

**கூட்ட அஜண்டா தயார் செய்வதையும் செயல்படுத்துவதையும் உள்ள முறைகேடுகள் மற்றும் நிதிஇழப்பு தொடர்பாக**

1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்படி மன்ற கூட்ட பொருள்கள் தயார் செய்து மன்ற உறுப்பினர்களுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை. மேலும் தலைவரால் கையொப்பமிடும் அனைத்து அஜண்டாவிலும் தேதி குறிப்பிடப்படுவதில்லை. மேலும் குறிப்பிட்ட நாள்களுக்குள் (3 முழு நாட்கள்) மன்ற உறுப்பினர்களுக்கு கூட்ட அறிவிப்பு வழங்கப்படுவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

2) மன்ற சாதாரண கூட்டத்தில் வைக்கப்படும் செலவு சீட்டுகள் அதிகப்படியாக உள்ளது. மேலும் அந்த செலவு சீட்டுகள் விபரம் தனித்தனியாக குறிப்பிடப்படாமல் செலவுச் சீட்டு எண். ஆரம்பம் மற்றும் முடிவு எண்ணிக்கை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிறப்பு செலவீனங்கள் தனியாக குறிப்பிடப்படாமலும் உள்ளது. இது தொடர்பாக மன்ற உறுப்பினர்களால் கேட்கப்படும் விபரங்கள் மன்ற தலைவராகலோ மற்றும் செயல் அலுவலராலோ தெரிவிக்கப்படுவதில்லை. மாறாக இருவரும் கூட்டம் முடிவுற்றதாக தெரிவித்து மன்றத்தை விட்டு வெளியேறி விடுகின்றனர். மேலும், பேரூராட்சியால் நிர்வகிக்கப்படும் அனைத்து ஆவணங்களையும் உறுப்பினர்கள் வேண்டும்போது பார்வையிட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 20 மற்றும் 21ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் மன்ற தலைவரோ செயல் அலுவரோ செலவு சீட்டுகளை பார்வையிட அனுமதிப்பதில்லை. மாறாக அனைத்து செலவு சீட்டுகளையும் மாதந்தோறும் உறுப்பினர்கள் ஒப்புதல் இல்லாமலும் செலவு செய்து வருகின்றனர். என்று தெரிவித்துள்ளார்.

3) செட்டியார் பேரூராட்சி செயல் அலுவலரால் மன்ற ஒப்புதலுடன் பெருமளவில் முறைகேடுகள் மற்றும் போலியான பில்கள் தயார் செய்து நிதி இழப்பு ஏற்பட்ட செலவினங்கள் மன்ற உறுப்பினர்களின் அனுமதி மற்றும் ஒப்புதல் பெறப்படாமல் கீழ்க்காணும் விபரப்படி தெரிவிக்கப்படுகிறது.

| கூட்டம் நடைபெற்ற தேதி விபரம் | பொருள் எண். | செலவு சீட்டு எண் (முதல்முடிய) போலி ஆவணங்கள் | ஆய்வு செய்ய வேண்டிய செலவு சீட்டுகள் |
|---|---|---|---|
| 13.05.2022 | 3 | 1 முதல் 175 முடிய | 175 |
| 30.06.2022 | 13 | 176 முதல் 359 முடிய | 184 |
| 28.07.2022 | 8 | 360 முதல் 535 முடிய | 176 |
| 16.09.2022 | 16 | 536 முதல் 887 வரை | 352 |

செலவுசீட்டுகள் அனைத்தும் செயல் அலுவலரால் பாஸ் செய்யப்பட்டு அதன் பின்னர் வரும் மன்ற கூட்டத்தில் விரிவாகவும், விளக்கமாகவும் தெரிவித்து செலவினங்கள் அனைத்திற்கும் மன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் பெறப்பட வேண்டியது அவசியம் என தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்த 1920 பிரிவு எண். 16ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது குறித்து மன்ற உறுப்பினர்களுக்கு தலைவரோ செயல் அலுவலரோ விரிவாக தெரிவிப்பதில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேற்காணும் விபரப்படியான செலவு சீட்டுகளுக்கு விரிவாக செலவினங்களை அஜண்டாவில் காட்டப்படாமல் உள்ளது. மேலும் முறைகேடுகள் மற்றும் போலியாக தயார் செய்யப்பட்ட பில்கள் மூலமாக ஏற்பட்ட நிதி இழப்புகளை சுட்டிக்காட்டியும் மன்ற கூட்டத்தில் வார்டு உறுப்பினர்கள் கேள்விகள் எழுப்பியதில் சரியான பதில்கள் கூறாமல் பேரூராட்சி மன்ற தலைவர் வெளிநடப்பு செய்துவிட்டடார். இது குறித்து அனைத்து நாளிதழ்களிலும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளது. அதற்கு ஆதாரமாக நாளிதழ்களின் ஜெராக்ஸ் நகல்கள் இத்துடன் இணைத்து தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி செட்டியார் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 04.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்திற்கு 10.11.2022அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**மனுதாரர் 10.11.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

“விருதுநகர் மாவட்டம் செட்டியார்பட்டி பேரூராட்சி வார்டு உறுப்பினரான நான், அப்பேரூராட்சியில் திட்டப் பணி மற்றும் பொது நிதிப் பணிகளுக்கான தகவல்களை கோரும்போது, அதனை சரிவர எனக்கு வழங்கப்படுவதில்லை. செட்டியார்பட்டி பேரூராட்சியில் நடைபெறும் திட்டப் பணிகள் மற்றும் பொது நிதிப் பணிகளுக்கான தகவல்களை மன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிக்காமல் தனக்கு வேண்டியவர்களுக்கு ஒப்பந்தப் பணியை அளிக்கின்றனர். ஒப்பந்தப்பணி தொடர்பாக நாளிதழ்களிலோ அல்லது பேரூராட்சியில் உள்ள தகவல் பலகையிலோ விளம்பரம் செய்யப்படுவதில்லை. இது தொடர்பாக மன்ற உறுப்பினர்காளல் கேட்கப்படும் கேள்விகளுக்கு முறையான பதில் இல்லை. செட்டியார்பட்டி பேரூராட்சியில் வாங்கப்படும் பொருட்கள் அனைத்தும் கூடுதல் விலை கொடுத்து அதாவது 100 சதவீதத்திற்கும் மேலாக கூடுதல் விலை கொடுத்து வாங்குகின்றனர்.

செட்டியார்பட்டி பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளில் பைப்லைன் சரிபார்த்தல், வடிகால் ரிப்பேர் போன்ற பில்களை வார்டு உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தாமலும்,

ஒப்புதல் பெறாமல் போலியாக பட்டியல் தயார்செய்து பெருமளவில் முறைகேடுகள் நடைபெற்றுவருகின்றன. மேலும், சுகாதார பயன்பாட்டிற்கான பிளிச்சிங் பவுடர், பினாயில் போன்றவற்றிற்கும், போலி பில்களை போட்டு பேரூராட்சி செயல் அலுவலரும் மற்றும் பேரூராட்சியைச் சேர்ந்தவர்களும் பேரூராட்சிக்கு பெருத்த நிதியிழப்பை ஏற்படுத்துகின்றனர். செயல் அலுவலரும், பேரூராட்சித் தலைவரும் எந்தவித சட்டதிட்டத்தை மதிப்பதில்லை. மன்றக் கூட்டத்திற்கான அஜெண்டா ரிஜிஸ்டரில் உறுப்பினர்களிடம் கையொப்பம் வாங்கப்படுவதில்லை.

மன்றக் கூட்டத்தின் பொருள் குறித்து மன்ற உறுப்பினர்களுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை. மேலும் அஜெண்டாவில் கையொப்பம் மட்டும் இட்டுவிட்டு, அதில் தேதியை குறிப்பிடுவதில்லை. அதே போன்று குறிப்பிட்ட நாளுக்குள் (3 முழு நாட்கள்) மன்ற உறுப்பினர்களுக்கு கூட்ட அறிவிப்பு வழங்கப்படுவதில்லை. செலவு சீட்டுக்களின் விவரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கேட்டபோதும், செயல் அலுவலர் செலவு சீட்டுக்களை பார்வையிட அனுமதிப்பதில்லை. செலவினங்கள் அனைத்திற்கும் மன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என நகராட்சி சட்டம் 1920ல் வழிவகை செய்யப்பட்டுள்ள நிலையில், இது குறித்து மன்ற உறுப்பினர்களுக்கு செயல் அலுவலர் சரிவர தெரிவிப்பதில்லை.

முடிக்காத பணியை முடித்ததாகக் கூறி உறுப்பினர்களுக்கு தவறான தகவலை செயல் அலுவலர் கொடுத்து வருகிறார். உதரானமாக செட்டியார்பட்டி பேரூராட்சி இல்லத்து பிள்ளைமார் கோவில் குறுக்குத் தெரு 1 கூட்டுறவு பேங்க் தெரு, பாம்பலம்மன் கோவில் தெரு போன்ற தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் தொடர்பாக செட்டியார்பட்டி வார்டு குழு/பகுதி சபா கூட்டத்திற்கான அழைப்புக் கடிதத்தில் பணிகள் முடிவுற்றுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (நகல் சமர்ப்பிக்கப்படுகிறது) ஆனால், மேற்கண்ட தெருக்களில் பேவர் பிளார் சாலை இன்னும் அமைக்கப்படவில்லை. மேலும் பேரூராட்சியில் ஒப்பந்தம், வரவு செலவு போன்ற கணக்கு வழக்குகளை என்போன்ற மன்ற உறுப்பினர்கள் கேட்கும்போது மிகவும் தாமதமாக பேரூராட்சியால் பதில் அளிக்கப்படுகிறது.

இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் புகாராக தெரிவித்தபோது எல்லாம் சரியாகத்தான் நடக்கின்றன என கூறிவருகிறார். இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தும் மேல்நடவடிக்கை ஏதுமில்லை. எனவே மேற்கண்ட செட்டியார்பட்டி பேரூராட்சியில் நடைபெற்றுவரும் நிர்வாக சீர்கேட்டினை களைந்திடவும், பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாதவாறும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 10.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"செட்டியார்பட்டி பேரூராட்சியில் நடைபெறும் அனைத்து திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மன்றும் விதிகளின்படியே பேரூராட்சியால் கோரப்படுகின்றன. அவை பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டும் பதிவுபெற்ற ஒப்பந்ததாரருக்கு பதிவுத் தபால் மூலமும் சார்பு செய்யப்பட்டும், பேரூராட்சியின் தகவல் பலகையில் விளம்பரம் செய்யப்பட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. பின்னர் தகுதியான ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்த விதிமுறைகளின்படி பணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் எவ்வித விதிமீறல்களும் இல்லை என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பைப்லைன் சரிபார்த்தல், வாறுகால் ரிப்பேர் போன்ற பணிகள் உடனுக்குடன் செய்யவேண்டிய நிலையில் நகராட்சிகள் சட்டம் 1920ன்படி அத்தியாவசிய செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கான ஒப்புதல் பேரூராட்சி மன்றத்தில் பெறப்படுகிறது. இதற்கான தீர்மானங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

செட்டியார்பட்டி பேரூராட்சியில், சுகாதாரத்தை பேணிக்காக்கும் பொருட்டு கிருமிநாசினிகள், தெரு மின் விளக்கு பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் குடிநீர் உபகரணங்கள் போன்றவற்றை வாங்கும்போது மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்ட நிறுவனத்திடம் வாங்கப்பட்டு இருப்பு மற்றும் செலவு விபரப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. செலவினங்கள் அனைத்தும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் கூறியவாறு செலவு விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுவதில்லை என்பது உண்மைக்கு மாறானதாகும். கூட்டப் பொருள் அதற்கான கால அவகாசத்தின்படி தலைவரால் ஒப்பம் இடப்பட்டு, கூட்ட பொருள் சார்பு பதிவேட்டின் மூலம் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான பதிவேடு இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது. பேரூராட்சி மன்றக் கூட்டத்தின்போது ஒவ்வொரு உறுப்பினர்களாலும் செலவினங்கள் பார்வையிடப்படுகிறது. இதற்கான பதிவேட்டினை கூட்டம் இல்லாத நாட்களில் நகராட்சிகள் சட்டம் 1920 தெரிவித்துள்ளவாறு எழுத்து மூலமான கோரிக்கையின் மூலம் அனைத்து உறுப்பினர்களும் பார்வையிடலாம். ஆனால் மனுதாரர் இதனை செய்யாமல் இம்முறை மன்றத்தில் தவறாக புகார் அளித்துள்ளார்.

பேரூராட்சியின் வரவு செலவு விவரங்களை மனுதாரர் எப்போது வேண்டுமானாலும் பேரூராட்சியில் பார்வையிடலாம் என்கின்ற தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தும், மனுதரால் எழுத்து மூலமாக வரவு செலவு விவரங்களை பார்வையிட கோரிக்கை வைக்கவில்லை. எனினும், இனி வருங்காலங்களில் விதிமுறைகளின்படி அனைத்து வரவு செலவு விவரங்களின் சுருக்கப்பட்டியலை அனைத்து உறுப்பினர்களின் பார்வைக்கும் அனுப்பப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 10.11.2022 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அவரால் சமர்பித்துள்ள ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.**

- மனுதாரர் தனது புகாரில் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுக்கா, செட்டியார்பட்டி நாயுடு தெரு, நெ.214/SSK/23, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.அறிவுமணி, தனது புகாரில் செட்டியார்பட்டி பேரூராட்சியில் திட்டப் பணி மற்றும் பொது நிதிப் பணிகளுக்கானத் தகவல்களை கோரும்போது அதனை சரிவர தனக்கு வழங்கப்படுவதில்லை என தெரிவித்துள்ளார் மேலும்
- செட்டியார்பட்டி பேரூராட்சியில் நடைபெறும் திட்டப் பணி மற்றும் பொது நிதிப் பணிகளுக்கானத் தகவல்கள் மன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிக்காமல் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே ஒப்பந்தபணியை அளிக்கின்றனர்.

- ஒப்பந்தபணி தொடர்பாக நாளிதழ்களிலோ (அ) பேரூராட்சிகளில் உள்ள தகவல் பலகையிலோ விளம்பரம் செய்யப்படுவதில்லை .
- பைப்லைன் சரிபார்த்தல், வடிகால் ரிப்பேர் போன்ற பில்களை வார்டு உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்துவதில்லை என்றும் ஒப்புதல் பெறாமல் போலியாக பட்டியல் தயார் செய்து பெருமளவில் முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன .
- சுகாதார பயன்பாட்டிற்கான பிளிச்சிங் பவுடர், பினாயில் போன்றவற்றிற்கும் போலி பில்களை போட்டு பேரூராட்சி செயல் அலுவலரும் மற்றும் பேரூராட்சியை சேர்ந்தவர்களும் , பேரூராட்சிக்கு பெருத்த நிதியிழப்பு ஏற்படுத்துகின்றனர்.
- மேலும் மன்ற கூட்டத்தில் பொருள் குறித்து மன்ற உறுப்பினர்களுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை, அஜெண்டாவில் கையொப்பம் மட்டும் இட்டுவிட்டு அதில் தேதியை குறிப்பிடுவதில்லை ஒப்பந்தம், வரவு செலவு போன்ற கணக்கு வழக்குகளை உறுப்பினர்கள் கேட்கும்போது மிகவும் தாமதமாக பேரூராட்சியால் பதில் அளிக்கப்படுகிறது என தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

**செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலம் மற்றும் அறிக்கையில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

- செட்டியார்பட்டி பேரூராட்சியில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற சட்டம் மற்றும் விதிகளின்படியே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன என்றும் அவை பத்திரிக்கையில் விளம்பரம் செய்தும், தகவல் பலகையில் இடம் பெறச் செய்தும் கோரப்படுகின்றன. இதில் விதி மீறல்கள் ஏதுமில்லை.
- பைப்லைன் சரிபார்த்தல், வடிகால் பழுதுபார்த்தல் போன்ற அத்தியாவசியப் பணிகள் உடனுக்குடன் பேரூராட்சியின் மன்ற ஒப்புதல் பெற்று செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
- மேலும், கிருமிநாசினைகள் தெரு மின் விளக்குகள் பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் குடிநீர் உபகரணங்கள் வாங்கும்போதும் மன்றம் ஒப்புதல் அளித்துள்ள நிறுவனத்திடமிருந்தே வாங்கப்படுகின்றன எனவும் அதன் விவரங்கள் அவை முறையாக இருப்பு பதிவேட்டில் பதியப்படுகின்றன எனவும், செலவினங்கள் அனைத்தும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு மன்ற ஒப்புதல் பெறப்படுகின்றன. எனவே செலவு விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுவதில்லை என்கின்ற மனுதாரரின் கூற்று தவறானதாகும்.
- மேலும் கூட்டப்பொருள் அதற்கான கால அவகாசத்தின்படி தலைவரால் ஒப்பம் பெறப்பட்டு கூட்டப்பொருள் சார்பு பதிவேட்டின் மூலம் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என குறிப்பிட்டுள்ள செயல் அலுவலர் பொருள் (Agenda) குறித்த பதிவேட்டினை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பித்து, இனி வருங்காலங்களில் விதிமுறைகளின்படி அனைத்து வரவு செலவு விவரங்களின் சுருக்கப்பட்டியலை அனைத்து உறுப்பினர்களின் பார்வைக்கு அனுப்பப்படும் என செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் செட்டியார்பட்டி பேரூராட்சியில் வரவு செலவு கணக்கு குறித்த விவரங்கள் வார்டு உறுப்பினர்கள் என்கின்ற முறையில் மனுதாரரால் கோரப்படும் தகவல்களை அளிக்காததை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. செட்டியார்பட்டி பேரூராட்சியின் வரவு செலவு விவரங்கள் மற்றும் செலவு சீட்டு விவரங்கள் போன்றவை அனைத்து பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் இனிவருங்காலங்களில் மன்ற கூட்டங்களிலே வழங்கிட செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் மனுதாரால் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள செலவு சீட்டு விவரங்களை மனுதாரருக்கு உடனடியாக வழங்கவும் செட்டியார்பட்டி செயல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. அதேபோன்று கூட்டப்பொருள் குறித்த பதிவேட்டினை கூட்டம் இல்லாத

நாட்களில் எழுத்து மூலமாக கோரிக்கைகள் வரும்பட்சத்தில் உறுப்பினர்கள் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்றும் பேரூராட்சியின் செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். செட்டியார்பட்டி பேரூராட்சியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான அனைத்து பட்டியல்களை (Bills) உள்ளாட்சி நிதித்தணிக்கைதுறை மூலம் ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பிக்க இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அறிவுறுத்தப்படுகிறது. அறிக்கையினை பெற்று உரிய நடவடிக்கை தொடர பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மன்ற உறுப்பினர்களே செயல் அலுவலர் மீது குற்றஞ்சாட்டுவது கவலை அளிக்கக்கூடிய போக்காகும். உதவி இயக்குநர் இது போன்ற நிலையைத் தவிர்க்க சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்க அறிவுறுத்தப்படுகிறது. பேரூராட்சிகளின் ஆணையர் இதில் தனிக்கவனம் செலுத்தி மன்ற உறுப்பினர்கள் கேட்கும் நியாயமான விளக்கங்களைஅளிக்க ஒரு சுற்றறிக்கை அனுப்பவும் பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R.அறிவுமணி,
நெ.214/SSK/23, நாயுடு தெற்கு தெரு,
செட்டியார்பட்டி வட்டம்,விருதுநகர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
செட்டியார்பட்டி பேரூராட்சி,
செட்டியார்பட்டி– 626 122.
ராஜபாளையம் வட்டம்,விருதுநகர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
விருதுநகர் மாவட்டம்

4) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர்நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

5) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம் ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.